## சுருக்கம்

வேளாண்மை-உழவர் நலத் துறை – தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையில் (TNOCD) பதிவு செய்யப்பட்ட அங்கக விளை பொருட்களின் நம்பகத்தன்மையை 100% மாநில நிதியுதவியுடன் எஞ்சிய பூச்சிக் கொல்லிகளின் பகுப்பாய்விற்கு உட்படுத்துதல் திட்டத்தை 2022-23-ஆம் ஆண்டிலிருந்து தொடர அனுமதியும், நடப்பு ஆண்டில் செயல்படுத்த ரூ.12.50 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியும் ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.5) துறை**

**அரசாணை(நிலை) எண்:159** நாள்: 20.07.2022

சுபகிருது வருடம், ஆடி 4,

திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சரின் நிதிநிலை அறிவிப்பு, நாள் 19.03.2022.
2. விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை இயக்குநரின் கடித எண்.சி2/230/2022, நாள் 29.04.2022.

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்டதில், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 19.03.2022 அன்று தாக்கல் செய்த 2022-23-ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையின்போது கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:

> "70. நஞ்சில்லா உணவு விளைவிக்கும் அங்கக விவசாயிகளுக்கு அவர்களது விளைபொருட்களில் நச்சுப் பொருட்களின் தன்மையினை அறிந்து அதன் தரத்தை உறுதிப்படுத்திடும் வகையில் எஞ்சிய நச்சு மதிப்பீடு பரிசோதனை செய்வதற்கான கட்டணத்தை முழு மானியத்தில் வழங்கும் பொருட்டு ஆண்டு ஒன்றுக்கு 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்."

2. மேலே இரண்டாம் கடிதத்தில் படிக்கப்பட்டதில், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை இயக்குநர் அவர்கள் விரிவான திட்ட அறிக்கையை

அரசுக்கு அளித்துள்ளார். திட்டத்தின் சிறப்பினையும், நன்மையையும், திட்டச் செயலாக்க வழிமுறைகளையும் அளித்ததுடன் தமிழ்நாடு அங்ககச்சான்றளிப்புத் துறையில் (TNOCD) பதிவு செய்யப்பட்ட அங்கக விளைபொருட்களின் நம்பகத்தன்மையை நூறு சதவிகித நிதியுதவியுடன் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களில் எஞ்சிய பூச்சிக்கொல்லி பகுப்பாய்விற்கு (முழு மானியத்தில்) உட்படுத்தும் பொருட்டு ரூ.12,50,000/-மாநில திட்டத்தில் வழங்கிட அரசிடம் அனுமதி கோரியுள்ளார்.

3. அரசானது, விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை இயக்குநர் அவர்களின் கருத்துருவை நன்கு பரிசீலித்த பின்னர், தமிழ்நாடு அங்ககச்சான்றளிப்புத் துறையில் (TNOCD) பதிவு செய்யப்பட்ட அங்கக விளைபொருட்களின் நம்பகத்தன்மையை நூறு சதவிகித நிதியுதவியுடன் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களில் எஞ்சிய பூச்சிக்கொல்லி பகுப்பாய்விற்கு (முழு மானியத்தில்) உட்படுத்தும் பொருட்டு ரூ.12,50,000/- (பன்னிரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாநில திட்டத்தில் ஒப்பளிப்பு வழங்கி திட்டத்தினை ஆண்டுதோறும் தொடர அனுமதித்து ஆணையிடப்படுகிறது. இத்திட்டத்தைப் பற்றிய விவரங்கள் மற்றும் செயலாக்க வழிமுறைகள் இவ்வாணையுடன் இணைப்பு 1-ஆக வெளியிடப்படுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.12,50,000/- கீழ்க்கண்ட கணக்கு தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2435 - ஏனைய வேளாண்மைத் திட்டங்கள்-
> 01 விற்பனை தரக்கட்டுப்பாடு - 102 தரம் பிரித்தல்,
> தரக்கட்டுப்பாட்டு வசதிகள்-மாநிலச் செலவினங்கள்
> AP - அங்கக சான்றளிப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு -
> 309 உதவித்தொகை - 09 ஏனையவை"
> [IFHRMS த.தொ.கு. 2435 01102 AP 30909]

5. மேலே பத்தி 3- இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.12,50,000/- 2022-2023-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2022-2023-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2022-2023-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு /

இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (வேளாண்மை/வ.செ.பொ-1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை இயக்குநர் அவர்கள் மேற்காணும் திட்டத்தின் செயல்பாடுகளின் முன்னேற்ற அறிக்கை மற்றும் சாதனை விவரங்களை மாதந்தோறும் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

7. இவ்வாணையானது நிதித் துறையின் இசைவின் பேரில், அ.சா. எண் 33459, நிதி (வே(ம)உ.ந), நாள் 14.07.2022 -இன்படி வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப்பேரேடு எண்.0692 (அறுநூற்று தொண்ணூற்று இரண்டு ) (IFHRMS ASL No.2022070692)

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
விதைச் சான்று (ம) அங்ககச் சான்று துறை இயக்குநர்,
கிண்டி, சென்னை-32.
வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,
சென்னை-5.
தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை,
சென்னை-35.
இயக்குநர், வேளாண்மை வணிகம் மற்றும் வேளாண் விற்பனை துறை,
சென்னை-32.
அரசு கூடுதல் செயலாளர் / ஆணையர், சர்க்கரைத் துறை,
சென்னை-35.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-3.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு),
சென்னை -35.
மாநில கணக்காயர், சென்னை-18/35 (பெயரில்).
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை-18.
முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை-18.
முதன்மை மாநில கணக்காயர் (AAD),
சென்னை-18.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை,
சென்னை -35

உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காயர்
(பொது மற்றும் சமூகத்தணிக்கைப் பிரிவு), சென்னை-9.

<u>நகல்</u>
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் முதுநிலை
தனிச் செயலாளர், வேளாண்மை - உழவர் நலத் துறை, சென்னை 9.
நிதித் (வேளாண்மை-உ.ந. /வ.செ.பொ-1, 2/ வ.வ.1) துறை, சென்னை-9.
வேளாண்மை - உழவர் நலத் (அநமு 3) துறை, சென்னை 9.
கோ.எண்.11213/வேஉ_5/2022.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண் 159, வேளாண்மை உழவர் நலத்(வே.உ.5) துறை, நாள் 20.07.2022

## இணைப்பு

**திட்டத் தலைப்பு:** தமிழ்நாடு அங்ககச்சான்றளிப்புத் துறையில் (TNOCD) பதிவு செய்யப்பட்ட அங்கக விளைபொருட்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்யும் பொருட்டு 100% நிதியுதவியுடன் எஞ்சிய பூச்சிக்கொல்லிகள் பகுப்பாய்விற்கு உட்படுத்துதல்.

| | |
|---|---|
| மொத்த செலவினம்: | ரூ.12.50 லட்சம் |
| செயல்படுத்தும் முகமை: | விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை. |
| காலம்: | ஆண்டுதோறும் |

## செயலாக்க வழிமுறைகள்

1. தமிழ்நாடு அரசு அங்ககச் சான்றளிப்புத் துறை (TNOCD) சுமார் 5000 சான்றளிக்கப்பட்ட அங்ககச் செயல்பாட்டாளர்களை உள்ளடக்கியுள்ளது. ஆக வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) தர அடிப்படையில் 250 மாதிரிகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது.
2. ஒரு மாதிரி பகுப்பாய்வு எஞ்சிய பூச்சிக்கொல்லியைப் பகுப்பாய்வு செய்ய பகுப்பாய்வுக் கட்டணம் சுமார் ரூ.400/- முதல் ரூ.500/- வரை ஆகும்.
3. NPOP (National Programme for Organic Production) அளவீட்டின் படி மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யவும், எஞ்சிய பூச்சிக்கொல்லி அளவு கன உலோகங்களின் மாசு ஆகிய இனங்களை ஆய்வு செய்ய தக்க வசதிகள் தமிழ்நாடு அரசு அங்ககச் சான்றளிப்புத் துறையில் (TNOCD) தற்போது இல்லாத காரணத்தால் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தால் (APEDA) அடையாளப்படுத்தப்பட்டு ஆய்வகங்களை அங்கீகரிக்கும் தேசிய வாரியத்தால் (NABL) அங்கீகரிக்கப்பட்ட ISO 17025 அளவீடுகள் உடைய பகுப்பாய்வகத்தில் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும்.
4. தமிழ்நாட்டில் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தால் (APEDA) அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் ஒப்பந்த அடிப்படையில் தமிழ்நாடு அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு பகுப்பாய்வு செய்ய தேர்வு செய்யப்படும்.
5. மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யத் தேவையான கட்டணம் ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட ஆய்வகத்திற்கு நேரடியாக வழங்கப்படும்.

**மாதிரிகளை எடுக்க விவசாயிகள் தேர்வு**

1. வழக்கமான அங்ககப் பண்ணைகள், விளைபொருட்கள் பதப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் விற்பனை செய்யப்படும் இடங்களில் அங்ககச்சான்று ஆய்வாளர்கள் தங்களின் சந்தேகத்திற்கிடமான தருணங்களிலும் மற்றும்

விவசாயி தடைசெய்யப்பட்ட பொருட்களை உபயோகிக்கலாம் என அனுமானிக்கக்கூடிய தருணங்களிலும் மாதிரி எடுக்கப்படுகிறது.

2. அங்ககப் பண்ணைகள் மாறுதல் காலத்திலிருந்து (Conversion period) அங்ககப் பண்ணையாக அறிவிக்கப்படும் போது (Organic) அதை உறுதி செய்யும் பொருட்டு மாதிரி எடுக்கப்படுகிறது.
3. அங்ககப்பண்ணை என்ற நிலையை அடைந்த பின்னரும் நாளதுவரை எந்த மாதிரியும் எடுக்கப்பட்டிருக்காத நிலையில் மாதிரிகள் எடுக்கப்படுகின்றன.
4. ஒரு விவசாயிக்கு ஓராண்டில் ஒரு மாதிரி என்ற வகையில் திட்டமிடப்பட்டுள்ளதால் அதிக பயனாளிகள் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.
5. இந்த நூறு சதவிகித நிதியுதவி பின்வரும் நிலைகளில் வழங்கப்படமாட்டாது.
   - அங்ககப்பண்ணை விவசாயி 'பரிவர்த்தனை சான்றிதழ்' வழங்க விண்ணப்பம் சமர்ப்பித்த நிலையில் அதற்குரிய மாதிரிக்கு பணம் செலுத்துவது அவரது முழு பொறுப்பு. இந்த நிலையில் அவர்களுக்கு நூறு சதவிகித நிதியுதவி பொருந்தாது.
   - விளைபொருட்களைப் பதப்படுத்துபவர்கள் மற்றும் வணிகர்கள் வழக்கமாக தங்களின் வாய்ப்புச்சான்றிதழைப் புதுப்பிக்க வேண்டி விண்ணப்பிக்கும் போது அதற்கான மாதிரிகளுக்கு கட்டணம் செலுத்துவது அவர்களின் முழு பொறுப்பு. இவர்களுக்கு நூறு சதவிகித நிதியுதவி பொருந்தாது.
   - அங்கக விளைபொருட்கள் பதப்படுத்தும் போது வணிகப்படுத்தத் தேவையான மாதிரிகள் எடுக்க வேண்டிய நிலையில் நூறு சதவிகித நிதியுதவி பொருந்தாது.

பகுப்பாய்வகங்கள் தேர்வு

1. அங்ககப்பண்ணைகளில் எடுக்கப்பட்ட மாதிரிகள் பரிசோதனை செய்திட வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தால் (APEDA) அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாட்டில் உள்ள பகுப்பாய்வகங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. மாதிரிக்கு அனுப்பப்படும் எளிதில் கெடும் தன்மையுள்ள விளைபொருட்கள் குறைந்த நேரத்தில் பகுப்பாய்வகத்தைச் சென்றடையும் வகையில் போக்குவரத்தை எளிதாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டிலுள்ள பகுப்பாய்வகங்கள் தேர்வு செய்யப்படுகின்றன.
2. தமிழ்நாட்டில் உள்ள பகுப்பாய்வகங்களை தேர்வு செய்வதில் 'திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி வெளியிடும் முறை (Open Tender) பின்பற்றப்படுகிறது.
3. மிகக்குறைந்த கட்டணத்திற்கு ஒப்புதல் அளிக்கும் பகுப்பாய்வகங்கள் தேர்வு செய்யப்படுகின்றன.
4. தேர்வு செய்யப்படும் பகுப்பாய்வகங்கள் மாவட்ட தலைமையிடத்திலிருந்து பகுப்பாய்வகத்திற்கு எடுத்துச் செல்லும் போது பாதிப்பு ஏதுமின்றியும் மாதிரியின் தன்மை கெடாமலும் பாதுகாப்பாக எடுத்துச் செல்வதுடன் போக்குவரத்திற்கான செலவையும் ஏற்கவேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட பகுப்பாய்வகங்களுக்கு உரிய பட்டியல்கள் மற்றும் தகுந்த ஆவணங்களைத் தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறைக்கு சமர்ப்பித்த பின் அதற்கான பகுப்பாய்வுக் கட்டணம் வழங்கப்படும்.

திட்டத்தின் நன்மைகள்

2021-22-ஆம் ஆண்டில் 77.6 மெட்ரிக் டன் அளவுள்ள மற்றும் 38.92 இலட்சம் மதிப்புள்ள தென்னை, தேங்காய் எண்ணெய், காபி, முருங்கை, தேயிலை மற்றும் கோக்கோ ஆகிய விளைபொருட்களின் ஏற்றுமதிக்கு தேவையான பரிவர்த்தனை சான்றிதழ் (Transaction Certificate) அங்ககச் செயல்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அங்கக விளைபொருட்களில் எஞ்சிய பூச்சிக்கொல்லி பகுப்பாய்வு 100% நிதியுதவியுடன் செய்வது அங்கக விளைபொருட்களின் தரத்தை உறுதி செய்வதுடன் அங்கக வேளாண்மை செயல்பாட்டாளர்களுக்கு நடப்பாண்டில் அதிக ஏற்றுமதி வாய்ப்புகளையும் வழங்கும். எஞ்சிய பூச்சிக்கொல்லிப் பகுப்பாய்வு முடிவுகள் கீழ்க்கண்ட தன்மைகளுக்கு உத்திரவாதம் அளிக்கின்றன.

- அங்ககச் செயல்பாட்டாளர்களின் விளைபொருட்களில் மிகக் குறைந்த அனுமதிக்கப்பட்ட அளவு பூச்சிக்கொல்லிகள் மட்டுமே எஞ்சியுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது.
- இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படவில்லை.
- அங்கக வேளாண் பொருள் நுகர்வோருக்கு பாதுகாப்பானதாக உள்ளது.
- அங்கக வேளாண் பண்ணையில் உள்ள விலங்குகளுக்கு எதிர் உயிரிகள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் வழங்கப்படவில்லை.
- அங்கக வேளாண் விளைபொருட்கள் அதிக விலையைப் பெறுவதுடன் அங்ககச் செயல்பாட்டாளர்களின் பொருளாதாரத்தை உயர்த்துகிறது.
- அதிக பொருளாதார உயர்வினால் மேலும் அதிக விவசாயிகளை அங்கக வேளாண்மையில் ஆர்வம் உள்ளவர்களாக ஆக்குகிறது.
- அங்கக வேளாண் விளைபொருட்களில், நீண்ட நாள் கெடாமல் பாதுகாக்கக் கலக்கப்படும் இரசாயனங்கள் இல்லாததால், புதியதாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும்.
- அங்கக வேளாண் விளைபொருட்களில் அவற்றின் தரத்திற்கு உத்திரவாதம் அளிக்கும் அங்கக வேளாண்மை சின்னம் பொருத்தப்பட்டிருக்கும்.
- வணிகர்கள் அதிக பணமதிப்பிற்கு பொருட்களின் மதிப்பை உயர்த்துவார்கள்.
- நுகர்வோரின் மகிழ்ச்சி அங்கக வேளாண்மையின் வெற்றிக்கு உத்திரவாதம் அளிக்கும்.

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

பிரிவு அலுவலர்